# மயிலாடுதுறையில் “என் ஊர் என் கனவு” மாவட்ட தொலைநோக்கு திட்டம் 2030 கருத்தரங்கம்!

மயிலாடுதுறை, பிப். 9-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் “என் ஊர் என் கனவு” மாவட்ட தொலைநோக்கு திட்டம் 2030 கருத்தரங்கை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் விஜய் திருமண மண்டபத்தில் “என் ஊர் என் கனவு” மாவட்ட தொலைநோக்கு திட்டம் 2030 கருத்தரங்கம் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ். ஸ்ரீகாந்த் தலைமை தாங்கினார். தாட்கோ தலைவர் என்.இளையராஜா, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா.எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு “என் ஊர் என் கனவு” மாவட்ட தொலைநோக்கு திட்டம் 2030 கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசுகையில்

மாநிலத்திற்கான “தொலைநோக்குத் திட்டம் 2030 உத்தி மற்றும் திட்ட ஆவணம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், இளைஞர் தலைவர்கள், துறை சார் வல்லுநர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களின் கனவுகள் மற்றும் விருப்பங்களைக் கண்டறியும் “உங்கள் கனவைச் சொல்லுங்கள்” என்ற புதிய திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது.

உங்கள் சொல்லுங்கள் கனவைச் சொல்லுங்கள் திட்டம் பல்வேறு தரப்பினரிடமிருந்து அவர்களின் விருப்பங்களைக் கேட்டறியும் வகையில் கருப்பொருள் சார்ந்த ஆலோசனைகளை உள்ளடக்கியது.

என் ஊர் என் கனவு இது ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படுகிற மாவட்ட அளவிலான நிகழ்ச்சியாகும். அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை அங்கீகரித்து பாராட்டுவதோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள். துறைசார் வல்லுநர்கள், அரசு சாரா நிறுவனங்கள் சேவை மனப்பான்மை கொண்ட தனிநபர்கள் தொழிலதிபர்கள் மற்றும் பிற பங்குதாரர்களை ஒன்றிணைத்து ஆலோசனை செயல்முறை மூலம் “மாவட்ட தொலைநோக்குத் திட்டம் 2030” உத்தி மற்றும் செயல் திட்டம்” தயாரிப்பதே இதன் நோக்கமாகும்.

இதன் தொடர்ச்சியாக மயிலாடுதுறை மாவட்டத்தில் இந்த கருத்தரங்கு நடைபெற்று வருகிறது இந்த கருத்தரங்கில் துறை சார்ந்த வல்லுனர்கள் கருத்துக்கள் மற்றும் பொதுமக்கள் கருத்துகள் கேட்கப்பட்டு “என் ஊர் என் கனவு 2030” என்ற புத்தக வடிவம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த கருத்தரங்கில் பல்வேறு தரப்பினரிடமிருந்து, பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் அரசுக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க அனுப்பி வைக்கப்படும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேசினார்.

தொடர்ந்து, விளையாட்டுத் துறை, கல்வித்துறை, வேளாண்மைத்துறை, மாற்;றுத் திறனாளிகள் நலத்துறை, மகளிர் திட்டம் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பொன்னாடை போர்த்தி மற்றும் நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

முன்னதாக, மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.5 கோடியே 30 இலட்சம் மதிப்பில் புதிய மின்னணு வாக்குப் பதிவு இயந்திர கிடங்கு கட்டுவதற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்.

## கேள்விக் கென்ன பதில் ?

**கேள்வி:** கோலாலம்பூரில் இந்தியப் பிரதமர் மோடி பேசியிருப்பது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

**மலேயா தமிழர் பதில்:**

**“ நெஞ்சில் உரமுமின்றி,**
**நேர்மைத் திறமுமின்றி,**
**வஞ்சனை சொல்வாரடி - கிளியே**
**வாய்ச்சொல்லில் வீரரடி !”**

என்ற மகாகவி பாரதியின் பாடலே நினைவுக்கு வருகிறது !

# பா.ஜ.க.விற்கு ஆதரவாக பழனிசாமி நடத்தும் வித்தியாசமான போராட்டம்!

## விருதுநகரில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி



கொடுத்து, உங்களை ‘நியூ ஏஜ் திரவிடியன் ஸ்டாக்’-ஆக உருவாக்குகிறார். நீங்கள் ஒவ்வொருவரும்தான் - தந்தை பெரியாரின் கொள்கை வாரிசுகள்! பேரறிஞர் அண்ணாவின் கொள்கை வாரிசுகள்! முத்தமிழறிஞர் கலைஞரின் கொள்கை வாரிசுகள்! நீங்கள்தான், அடுத்து நம்முடைய கழகத்தையும் - தமிழ்நாட்டையும் காப்பாற்றப் போகிறீர்கள்.

நான் வரும் வழியில், செல்போனில் மாநாட்டின் நிகழ்ச்சிகளை எல்லாம் கவனித்துக் கொண்டு வந்தேன். சிவா பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்சைக் கேட்டபோது, அதை நான் சொல்ல வேண்டும்; நானும் வலியுறுத்த வேண்டும் என்று முடிவு செய்துதான் இந்த மேடைக்கு வந்தேன்.

உங்களுக்கெல்லாம், இந்த மாநாட்டிற்கு அழைப்பு விடுத்து நான் வெளியிட்ட வீடியோவில், மூன்று விஷயங்களை குறிப்பிட்டிருந்தேன். அதில் முதலாவது, எதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து இயங்க வேண்டும் என்பதுதான். நம்முடைய அடிப்படைக் கொள்கைகள் என்ன? சமூகநீதி, சுயமரியாதை, மாநில சுயாட்சி, மொழியுணர்வு, இன உணர்வு!

**மொழியுணர்வு, சமூகநீதி – மாநில சுயாட்சி இவைகளே நமது அடிப்படை கொள்கைகள்!**

மொழியுணர்வையும், இனவுணர்வையும் எடுத்துக் கொண்டால், நம்முடைய தாய்மொழியான தமிழுக்குப் பல்வேறு கால கட்டங்களில், ஆபத்து வந்தபோது, கடுமையாகப் போராடி தடுத்திருக்கிறோம்! ஆனாலும், மும்மொழிக் கொள்கை என்ற பெயரில், இந்தி மொழியைத் திணிக்கும் ஆபத்து இன்றைக்கும் நம்முடைய தலைக்கு மேல் தொங்கும் கத்தி போன்று தொங்கிக் கொண்டு இருக்கிறது! மொழியை அழித்தால், நம்முடைய அடையாளத்தை அழித்துவிடலாம் என்று நினைக்கிறார்கள்! அதை முறியடிக்க நீங்கள் வேண்டும்!

அடுத்து, முக்கியமான கொள்கை சமூகநீதி! நீங்கள் அனைவரும் நன்றாகப் படித்து டிகிரி வாங்கியிருப்பீர்கள், உங்கள் அப்பா-அம்மாக்களில் பலர் படித்திருப்பார்கள். ஆனால், உங்கள் தாத்தா-பாட்டி அவர்களுடைய நிலைமை என்னவாக இருந்தது என்று நினைத்துப் பாருங்கள்? நமக்கெல்லாம் கல்வி எதற்கு என்று ஒதுக்கி வைத்திருந்தார்கள்... வேலைகளில் நமக்கு இடம் கிடைக்காது, இருக்காது! அந்த அநீதியை இடஒதுக்கீட்டால் உடைத்து, சமூகநீதியை நிலை நிறுத்தினோம்! ஆனால், இப்போது ‘நீட்’ போன்ற தேர்வுகளைக் கொண்டு வந்து, பழைய நிலைமையை உண்டாக்குகிறார்கள்! இதைத் தடுக்க உண்மையான வலிமையுள்ள ஒரே இயக்கம், நம்முடைய இயக்கம்தான்! அதற்குத்தான் நீங்கள் வேண்டும்!

அடுத்து, நம் உயிர்க் கொள்கை மாநில சுயாட்சி! மாநிலங்களின் கூட்டமைப்புதான் இந்தியா! இந்தியா என்பது கூட்டமைப்பு. இங்கே கூட்டாட்சிக்கு எவ்வளவு மதிப்பளிக்க வேண்டும் என்று நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தாலும், மாநிலங்களுக்கு அதிகாரங்களே இல்லாத நிலைமைதான் இருந்தது! அவ்வளவு ஏன், மாநில முதலமைச்சர்களால், விடுதலை நாளில் கூட தேசியக் கொடியை ஏற்ற முடியாத நிலைமைதான் இருந்தது. இன்னும் நிறைய பிரச்சினை. இதையெல்லாம், போராடி, இந்த நிலைமைகளை மாற்றி, ஓரளவிற்காவது அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கிடைப்பது போன்று செய்தோம்! மாநிலக் கட்சிகளால், ஆட்சியைப் பிடிக்க முடியும் என்று இந்தியாவில் முதன்முதலில் ஆட்சியமைத்துக் காட்டியதே இந்த தி.மு.க.தான்! மறந்துவிடாதீர்கள். நம்முடைய தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கும் அத்தனை மாநிலங்களுக்கும் நாம் உரிமைகளைப் பெற்றுத் தந்தோம்!

**மாநில கட்சிகளே இருக்கக்கூடாது என செயல்படும் பா.ஜ.க.!**

ஆனால், இப்போது மீண்டும் மாநிலங்களின் அதிகாரங்களை ஒன்றியத்தில் கொண்டு சென்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்! மாநிலங்களை முனிசிபாலிட்டிகள் போன்று மாற்ற வேண்டும் என்று துடியாகத் துடிக்கிறார்கள்! மாநிலக் கட்சிகளே இருக்கக் கூடாது என்று பா.ஜ.க. செயல்படுகிறது. ஆனால், அவர்களால் தொட முடியாத ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்! இதைப் பாதுகாப்பதற்கு நீங்கள் தேவை!

அடுத்து, நம்முடைய உறுதிக் கொள்கை சுயமரியாதை! இடுப்பில் கட்டியிருந்த துண்டு, தோளுக்கு வந்த வரலாறு அது! தன்மானம்தான் உயிர்மூச்சு என்று தமிழினம் தலைநிமிர்ந்த வரலாறு! ஒவ்வொரு தனிமனிதரின் சுயமரியாதையையும் காப்பாற்றி, தமிழ்நாடு தலைநிமிர்ந்து நின்றால், இப்போது, அடிமைகளும் - துரோகிகளும், எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு, ஒட்டுமொத்த மாநிலத்தின் சுயமரியாதையையும் அடகு வைக்க முயற்சி செய்கிறார்கள்! அதனால்தான், “தமிழ்நாடு தலைகுனியாது” என்று சொல்லும் தெம்பும், திராணியும், நெஞ்சுரமும் கொண்டிருக்கும் ஒரே இயக்கமாக, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் விளங்கிக் கொண்ருக்கிறது! சுயமரியாதையை விட்டுக் கொடுக்கும் கூட்டத்தை வீழ்த்த நீங்கள் அனைவரும் தேவை!

அதனால்தான் சொன்னேன், தமிழ்நாட்டிற்கும் - தமிழினத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் நீங்கள் தேவை! உங்களைப் போன்ற உடன்பிறப்புகளின் எண்ணிக்கை அதிகமானால், ஒரு நூற்றாண்டு மட்டுமல்ல, இன்னும் பல நூற்றாண்டு காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்தக் கொம்பனாலும் தொட்டுக் கூட பார்க்க முடியாது!

**இளைஞர்களுக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்!**

இரண்டாவதாக, நேற்று நான் சொன்னேன். இளைஞர்களான நீங்கள் எவ்வாறு கொள்கையுடன் செயல்பட வேண்டும்? மொழிப்பற்றுடன் மொழி ஆற்றலும் கொண்டவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். அதிக புத்தகங்களைப் படியுங்கள்! திராவிட இயக்க வரலாற்றைச் சொல்லும், யூடியூப் வீடியோக்களைப் பாருங்கள். நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்த அறிஞர்களின் பேச்சுகளை கேளுங்கள். பேருந்து, இரயிலில் பயணம் செய்யும்போது, நீங்கள் அதற்காக தினமும் ஒரு மணிநேரம் செலவு செய்யுங்கள். உங்கள் சிந்தனைகளைக் கோவையாக எழுதிப் பழகுங்கள்! யாரோ எழுதியதை ஃபார்வார்டு செய்வதைவிட, நீங்கள் எழுதியதை அடுத்தவர்கள் ஃபார்வார்டு செய்ய வேண்டும். அந்தளவிற்கு நீங்கள் சிறப்பாக எழுத வேண்டும்! சிறு கூட்டங்களில் பேசுங்கள். சோஷியல் மீடியாவில் பேசி வீடியோஸ் போடுங்கள். கலந்துரையாடல் நடத்துங்கள். பல தரப்பு மனிதர்களையும் சந்தித்து உரையாடுங்கள். கழகத்தின் கொள்கைகளைப் பரப்புங்கள். நாம் செய்த சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள். இவையெல்லாம்தான் கழகத்தையும் வளர்க்கும்! உங்களையும் வளர்க்கும்!

நாம்தான் ஏழாவது முறையும் ஆட்சி அமைக்கப் போகிறோம். நம்முடைய எதிரிகள் உட்பட யாருக்கும் இதில் சந்தேகம் கிடையாது. ஆனால், நாம்தான் எப்படியும் வெற்றி பெறப் போகிறோமே என்று மெத்தனமாக இருந்துவிடக் கூடாது. பரம்பரை பரம்பரையாகத் தி.மு.க.விற்கு வாக்களிக்கும் குடும்பமாக இருந்தாலும் சரி, இதுவரை நமக்கு வாக்களிக்காத குடும்பமாக இருந்தாலும் சரி, பரப்புரையின் கடைசி நிமிடம் வரை மக்களைச் சந்தித்து வாக்கு கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்! இதுதான் உங்களுக்கான டாஸ்க்! செய்வீர்களா...

**அனைத்திலும் தமிழ்நாடுதான் டாப்!**

மூன்றாவதாக நான் சொன்னது, எதற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் தமிழ்நாட்டில் தொடர வேண்டும் என்று. இந்தியாவில் எந்த மாநிலத்திலும், ஒரு அரசு ஐந்தே ஆண்டுகளில், நாம் செய்தததைப் போன்று இவ்வளவு சாதனைகள் செய்ததாக வரலாறு உண்டா! ஒன்றிய அரசின் ரேங்கிங் ஆனாலும் சரி, நேஷனல் மேகசின்கள் வெளியிடும் ரேங்கிங் ஆனாலும் சரி, எக்கனாமிஸ்ட் மாதிரி இண்டர்-நேஷனல் இதழில் வரும் செய்திகள் ஆனாலும் சரி, அனைத்து ரேங்கிங்கிலும் தமிழ்நாடுதான் ‘டாப்’! தமிழ்நாடுதான் ‘சூப்பர் ஸ்டார் ஸ்டேட்’. அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு முன்னேறி யிருக்கிறது. இதை நீங்கள் எங்கே வேண்டுமானாலும் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லலாம்!

தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் நிச்சயமாக ஏதோ ஒரு திட்டத்தில் பயனடையும் வகையில் நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பெண்களின் உழைப்பிற்கு அங்கீகாரமாக மகளிர் உரிமைத் தொகை! அவர்கள் சுதந்திரமாகப் பயணம் செய்யக் கட்டணமில்லா விடியல் பயணம்! சொந்த ஊரை விட்டு வெளியூரில் பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு மாவட்டந்தோறும் தோழி விடுதிகள்! அரசுப் பள்ளி மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்தால், மாதம் ஆயிரம் ரூபாய் தரும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன்! அனைத்து மாவட்டங்களிலும் புதிய தொழிற்சாலைகள்! அதன் மூலமாக இலட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள்! அந்த வேலைவாய்ப்புகளைப் பெற, நான் முதல்வனில் திறன் பயிற்சி! மாநிலம் முழுவதும் மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், நூலகங்கள், சாலைகள், மேம்பாலங்கள், குடிநீர் திட்டங்கள் என்று உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

**எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டங்களைத் தந்திருக்கிறோம்!**

நீங்கள் கெத்தாகச் சொல்லலாம்... இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு திட்டங்களும் இருக்காது; இத்தனை பயனாளிகளும் இருக்க மாட்டார்கள்! தமிழ்நாட்டிற்கு நிகர் தமிழ்நாடு மட்டும்தான்! ஒன்றிய அரசு மாநிலங்களை ஒப்பிட்டு எந்தத் துறையில் விருதுகள் கொடுத்தாலும், அதைத் தமிழ்நாடுதான் வாங்குகிறது!

இவ்வாறு, அனைத்திலும் நாம் ‘நம்பர் ஒன்’-ஆக இருந்தாலும், பட்ஜெட் என்று வந்துவிட்டால் நமக்கு ஒன்றும் கிடையாது! இந்த ஆண்டு தேர்தலை மனதில் வைத்தாவது, ஏதாவது ‘எலக்‌ஷன் ஸ்டண்ட்’ செய்வார்கள் என்று நாம் எதிர்பார்த்தோம்! கடைசியில் அதுவும் இல்லை. வழக்கம் போல ஈரத்துண்டுதான்!

தமிழ்நாட்டில் இருந்து நாங்கள் தொடர்ந்து என்ன கேட்கிறோம்? எங்களுக்கு நியாயமாகச் சேர வேண்டிய கல்வி நிதியைக் கொடுங்கள், மெட்ரோ நிதியைக் கொடுங்கள், பேரிடர் நிவாரண நிதியைக் கொடுங்கள், ஜல் ஜீவன் திட்டத்துக்கான நிதியைக் கொடுங்கள், புதிய ரயில் திட்டங்களைக் கொடுங்கள், ஓசூர் விமான நிலையத்திற்கு அனுமதியைக் கொடுங்கள், வரி வருவாயில் 50 சதவிகிதமாகக் கொடுங்கள், “நீட்”டில் இருந்து விலக்கு கொடுங்கள், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை கட்டிக் கொடுங்கள், தொகுதி மறுவரையறையில் தமிழ்நாட்டின் தொகுதி அளவு குறைக்கப்படாது என்று நாடாளுமன்றத்தில் வாக்கு கொடுங்கள், கீழடி அறிக்கையைக் கொடுங்கள், இதையெல்லாம்தான் நாங்கள் கொடுங்கள், கொடுங்கள் என்று கேட்கிறோம்! ஆனால், அவர்கள் நமக்குக் கொடுத்தது வெறும் ஜீரோ! அப்போது நாமும் அவர்களுக்கு எலக்‌ஷனில் அதையேதான் திருப்பித் தர வேண்டும். பா.ஜ.க. மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாக N.D.A. கூட்டணியும், 2024 நாடாளுமன்றத் தேர்தல் போன்றே, சட்டமன்றத் தேர்தலிலும் ஜீரோ ஆக வேண்டும்!

## 100 நாள் வேலைத்திட்டத்தை மாற்றியதை அறியாமல் பா.ஜ.க. அரசுக்கு ஆதரவாக ஓனரை மிஞ்சிய லேபராக செயல்படுகிறார் பழனிசாமி!

**பா.ஜ.க.வின் கிளைச் செயலாளராக மாறியுள்ள பழனிசாமி!**

தமிழ்நாட்டிற்கு ஜீரோ என்று சொன்ன ஒன்றிய அரசை எதிர்த்து குரல் கொடுக்காமல், பா.ஜ.க.வின் கிளைச் செயலாளராக மாறியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி. எடப்பாடி பழனிசாமி இப்போது முழுவதுமாக N.D.A. பழனிசாமியாக மாறி நிற்கிறார்! “நானும் ரவுடிதான், நானும் ரவுடிதான்” என்று சொல்வது போன்று, மைக் முன்னால் நின்று கொண்டு, “நான்தான் கூட்டணிக்குத் தலைமை, நான்தான் கூட்டணிக்குத் தலைமை” என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார். சொல்லவில்லை... புலம்பிக் கொண்டிருக்கிறார்!

இந்த நிலையில், ஒரு வித்தியாசமான போராட்டத்தை இப்போது அவர் அறிவித்திருக்கிறார். பா.ஜ.க. அரசு கொண்டு வந்திருக்கும் 125 நாள் வேலைத் திட்டத்தை நாம் தடுக்கிறோமாம். அதற்காகப் போராட்டமாம். அவர் முதலில் அந்தச் சட்டத்தைப் பற்றி எதையாவது படித்தாரா? அந்தச் சட்டத்தின் பெயரை அவரால் சொல்ல முடியுமா? அப்படி இருந்தால், அவருடைய அறிக்கையில் அதை ஏன் குறிப்பிடவில்லை? 100 நாள் வேலை என்பது, உரிமையாக இருந்த போதே 50 நாள்கூட பா.ஜ.க. அரசு வேலை தரவில்லை! இப்போது எவ்வாறு 125 நாள் கொடுப்பார்கள்? இதில் என்ன என்றால், இனி மாநில அரசுதான் 40 விழுக்காடு நிதியைத் தர வேண்டும் என்று வேறு மாற்றியிருக்கிறார்கள். இதெல்லாம் பழனிசாமி அவர்களுக்குத் தெரியுமா, தெரியாதா? என்ன சட்டம், என்ன திருத்தம் செய்திருக்கிறார்கள் என்று ஒன்றும் தெரியாமல், இவர் வந்தால் 150 நாட்களுக்கு உயர்த்துவோம் என்று வேறு அறிவித்திருக்கிறார். ஓனரை மிஞ்சிய லேபராக இப்போது இருக்கிறார் பழனிசாமி அவர்கள்.

அவர்கள் கூட்டணியில் இருக்கும் டிசைனைப் பாருங்கள். அம்மையார் ஜெயலலிதா அவர்களின் மரணத்திற்குப் பிறகு, முதலில் சசிகலா அவர்களை முதலமைச்சராக்க நினைத்தார்கள். அது முடியாமல் போன காரணத்தினால்தால், கூவத்தூரில் வைத்துப் பழனிசாமியைக் கொண்டு வந்தார்கள். தனக்குப் பதவி கொடுத்தவர்களையே கட்சியில் இருந்து நீக்கினார் பழனிசாமி! கடந்த தேர்தலில் அனைவரும் பிரிந்து பிரிந்து நின்றார்கள். இப்போது, அதில் பாதி பேர் பா.ஜ.க.வுடனே திரும்ப வந்து சேர்ந்து கொண்டு இணைந்துவிட்டார்கள். இவர்கள் மொத்தத்தில் மக்கள் நலனுக்காக கூட்டணி நடத்தவில்லை. இவர்களுக்குள்ளே ‘மியூசிக்கல் சேர்’-தான் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நடக்க இருக்கும் தேர்தல், ஒட்டுமொத்த தமிழ்நாடு வெர்சஸ் N.D.A.! இதில் நாம் தமிழ்நாட்டை வெற்றி பெற வைக்க வேண்டும்! தமிழ்நாட்டில் தோல்வி என்பது பா.ஜ.க.விற்கு புதிது இல்லை! தினமும் காலையில் சூரியன் உதிப்பதைப் போன்று அவர்களுக்கு அது ஒரு ரொட்டீன்! ஆனால், இதுவரை அடைந்த தோல்வியைவிட மிகப்பெரிய தோல்வியை பா.ஜ.க.வும், சுயநலத்துக்காகச் சுயமரியாதையை விற்று டெல்லிக்கு சேவகம் செய்யும் அடிமை அ.தி.மு.க.வும் அடையப் போகிறது. இதுவரை அடைந்த வெற்றிகளை விட மிகப்பெரிய வெற்றியைத் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அடையப் போகிறது.

**முன்னேறிய தமிழ்நாட்டை மேலும் உயர்த்திக் காட்டுவோம்!**

வளர்ந்த தமிழ்நாட்டை, மேலும் சிறந்த தமிழ்நாடாக உயர்த்துவோம். முன்னேறிய தமிழ்நாட்டை இன்னும் முற்போக்கான தமிழ்நாடாக உயர்த்துவோம். அதற்கு இளைஞரணியினர் உங்களுடைய முழு உழைப்பைக் கொடுக்க வேண்டும். உங்கள் உழைப்பிற்கான உயர்வு நிச்சயம் உங்களைத் தேடி வரும்!

தம்பி உதயநிதி அவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு நிகழ்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். என்னுடன் இளைஞரணியில் இருந்தவர்கள் எல்லாம் இப்போது பல்வேறு பொறுப்புகளுக்கு உயர்ந்தார்கள் என்று நேற்று வெளியிட்ட வீடியோவில் கூட நான் சொல்லியிருக்கிறேன். இதுகுறித்து ஒரு லிஸ்ட்டேகூட எடுத்துப் பார்த்தேன். இப்போது அமைச்சரவையில், இளைஞரணியில் இருந்தவர்கள் பத்து பேர் அமைச்சர்களாக இருக்கிறார்கள். 24 பேர் MLA-க்களாக இருக்கிறார்கள். 4 பேர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். மேயராக 3 பேர் இருக்கிறார்கள். இதற்கு முன்பிருந்த கேபினட்டிலும் இளைஞரணியில் இருந்து அமைச்சர்களாகத் தேர்வாகி இருந்தார்கள். அப்படிப்பட்ட நான் மறந்துவிடுவேனா... என் மூத்த பிள்ளை இளைஞரணி. சொன்னாரே, தம்பி உதயநிதி. நீங்கள் உண்மையாக உழைத்தால், உங்களுக்கான வாய்ப்புகள் நிச்சயம் உங்களைத் தேடி வரும். உங்கள் சீனியர்ஸ் போன்று, உங்கள் முன்னோடிகளைப் போன்று, நீங்களும் உழைக்க வேண்டும்!

**ஜனநாயகப் போரில் நாம் வெல்வோம் ஒன்றாக!**

மூத்தோரை மதித்து - இளையோரை அரவணைத்து - உடன்பிறப்புகள் அனைவரும் ஒரு தாய் மக்களாக அன்பு செலுத்துங்கள்! உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள், வாழ்த்துகள்!

உழையுங்கள்! அதுவும், உங்கள் தனித்தன்மை அனைவருக்கும் தெரிவது போன்று உழையுங்கள்! உங்கள் உழைப்பால் கழகத்தையும், மாநிலத்தையும் உயர்த்துங்கள்! அடுத்து வெற்றி மாநாட்டில் மீண்டும் சந்திப்போம்! தமிழ்நாடா - N.D.A.-வா என்ற ஜனநாயகப் போரில் நாம் வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.